**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : MC 9/2025**

**Prosecution witness : எ.சா.1** **Date : 17.03.2026.**

| Name : தாசநாயக்கன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை–**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நானும் 1ம் மனுதாரரும் காதலித்து திருமணம் செய்தோம் என்றால் ஆமாம். மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா பேத்தி ஆவார். எங்கள் இருவர் வீடும் அருகருகே உள்ளது என்றால் ஆமாம். திருமணத்திற்கு பிறகு அடிக்கடி மனுதாரர் தேவையில்லாமல் பிரச்சனை செய்தார் என்பது பொய் என்றும் அது சம்மந்தமாக பெரியோர்கள் முன்னிலையில் பேச்சு வார்த்தை செய்தோமா என்றால் செய்தோம். அது குறித்து முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2) திருமணம் ஆன பிறகு நண்பர் வீட்டில் நான்கு நாட்கள் இருந்தோம் என்றால் ஆமாம். பிறகு பெற்றோர்கள் சம்மதித்து பிறகு தான் வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றால் ஆமாம். அதன் பிறகு தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் ஆமாம். பஞ்சுகாளிபட்டியில் தனிகுடித்தனமாக இருந்த போது தான் மனுதாரர் கருவுற்றார் என்றால் ஆமாம். பின்னர் கருவுற்ற பிறகு என் வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றால் ஆமாம்.

3) என் வீட்டில் இருந்த போது என் சகோதரிகள் அடிக்கடி சண்டை போடுவார்கள் என்றால் மனுதாரர் தான் வேண்டுமென்றே சண்டைக்கு செல்வார். என் சகோதரிகள் மற்றும் அம்மா சண்டை போட்டதால் தான் கரு கலைந்தது

என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் எங்கள் இருவரையும் அழைத்து விசாரித்து எழுதி வாங்கினார்கள் என்றால் ஆமாம். என்னிடமும் என் தாயாரிடமும், சகோதரியிடமும் இனி மனுதாரரிடம் பிரச்சனை செய்யக்கூடாது என எழுதி வாங்கினார்கள் என்றால் ஆமாம்.

4) மனுதாரர் தனது தாயார் பேச்சை கேட்டுக் கொண்டு என் அம்மாவிடம் பிரச்சனை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் குடும்பத்தார் யாரும் எதிலும் தலையிடவில்லை என்றால் ஆமாம். என்னை மனுதாரரும் அவரது தாயாரும் மிரட்டியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் தான் என் தாயார் மற்றும் சகோதரிகள் பேச்சை கேட்டு நான் குடித்துவிட்டு மனுதாரரிடம் பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு குடிப்பழக்கம் இல்லை.

5) இது சம்மந்தமாக மேச்சேரி காவல் நிலையத்தில் என் மனைவி புகார் கொடுத்து சி.எஸ்.ஆர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2018 ம் வருடம் எவ்வித காரணமும் இன்றி என் மனைவியிடம் சண்டை போட்டு வீட்டை விட்டு துரத்தினேன் என்றால் இல்லை. இது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தான் சண்டை போட்டு விட்டு இரு வாரம் கழித்து அழைத்து செல்வதாக சொல்லிவிட்டு அழைத்து செல்லாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. 2018 ம் வருடம் முதல் இன்றையதேதி வரை நான் குழந்தையை பார்க்கவில்லை என்றால் ஆமாம். குழந்தை எனக்கு பிறக்கவில்லை என்று என் மனைவி சொல்லிவிட்டார்.

6) குழந்தையை நான் பார்க்க சென்ற போது என்னை மிரட்டியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 5 ல் சொல்லப்பட்ட தகவல் குறித்து கேட்ட போது அது உண்மை என்று சொன்னார். தற்போது நித்யா என்ற பெண்ணுடன் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

7) நான் நித்யா என்ற பெண்ணுடன் வாழ்ந்து வருவதால் தான் முதலமைச்சர் தனி பிரிவிற்கு மனு அனுப்பப்பட்டு விசாரிக்கப்பட்டேன் என்றால் ஆமாம். அந்த நித்யா என்பவர் என் தாயார் உடல் நிலை சரியில்லாத போது அவரை பார்த்து கொள்ள வந்தார். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு மனுதாருக்கும் நித்யாவிற்கும் பிரச்சனை வந்து மேச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து என்னை 08.10.2025 ம் தேதி அன்று விசாரித்தார்கள் என்றால் ஆமாம்.

8) என்னிடம் காட்டப்படும் சி.எஸ்.ஆர்.762/2025 என்ற மனு ரசீது வழங்கப்பட்டது உண்மையா என்றால் ஆமாம். அது **ம.சா.ஆ. 8** ஆகும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மனு கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் வீட்டிற்கு ஆள் வைத்ததும், நான் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருப்பதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் கூலி வேலை செய்கிறேன். எனக்கு இரு அறுவை சிகிச்சை செய்ததால் தற்போது வேலைக்கு செல்ல இயலவில்லை.

9) 2025 ம் வருடம் நியூரோ அறுவை சிகிச்சை செய்ததை தற்போது வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனைவிக்கும் குழந்தைக்கும் சட்டப்படி ஜீவனாம்சம் செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக் கொண்டபடி நான் பணம் கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் என்னிடம் சொத்து தான் உள்ளது. எனக்கு 23 சென்ட் உள்ளது.எனக்கு 1 1/2 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அது பூர்வீக சொத்தாகும். நான் 23 சென்ட் மனுதாரருக்கு எழுதி கொடுக்க முதலில் சம்மதம் தெரிவித்தேன். தற்போது நான் கூலி வேலைக்கு செல்வதால் தற்போது எதுவும் கொடுக்க இயலாது.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.18 05:09:44 +0530

Judicial Magistrate No.II,
Mettur.